செ.வெ.எண்:204 நாள்: 12.03.2019

**செய்தி மக்கள் தொடர்புத்துறை அதிநவீன மின்னணு வாகனம் மூலம் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் விழிப்புணர்வு விளம்பர படம் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

**மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

செய்தி மக்கள் தொடர்புத்துறை அதிநவீன மின்னணு வாகனம் மூலம் தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் விழிப்புணர்வு விளம்பர படம் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

பாராளுமன்ற தேர்தல் தமிழகத்தில் 18.04.2019 அன்று நடைபெறவுள்ளதையொட்டி இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் வாக்காளர்கள் அனைவரும் தங்கள் வாக்கினை தவறாது அளித்திடும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வாக்காளர் விழிப்புணர்வு குறித்த 5 நிமிடம் 10 வினாடிகள் ஓடக்கூடிய விளம்பரம் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனம் மூலம் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒளிப்பரப்பப்படுகிறது.

இதேபோன்று உள்ளூர் கேபிள் டிவிகளிலும், திரையரங்குகளிலும் மேற்குறிப்பிட்ட வாக்காளர் விழிப்புணர்வு விளம்பரம் ஒளிபரப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**